**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ம் நாள் திங்கள்கிழமை**

**IA.249/2023**

**in**

**OS.292/2012**

**(CNR.NO.TNVP02-000297-2012)**

1. முருகன்
2. அஞ்சலை அம்மாள்
3. பெரியநாயகம் அம்மாள்
4. பார்வதி .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. புட்லாயி
2. குமரவேல்
3. கலியம்மாள்
4. சுகந்தி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 06.07.2023 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 18.10.2023 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கு.பா.பழனியப்பன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு ஆர்டர் 7 ரூல் 14-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் மனுவுடன் தாக்கல் செய்யப்படும் மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களான 1) பிறப்புச் சான்றிதழ் சான்றிடப்பட்ட நகல் 2) பள்ளி கல்வி மாற்றுச்சான்றிதழ் அசல் மற்றும் 3) ஆறுமுகம் என்பவரின் கருமகாரிய பத்திரிக்கை அசல் ஆகியவைகளை இந்த வழக்கின் ஓர் அங்கமாக ஏற்று உத்தரவிட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர்கள் தரப்பில் தான் மேற்படி மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் 1ம் வாதி என்றும் மேற்படி அசல் வழக்கு மனுதாரர் மற்றும் இதர வாதிகளால் தாவா பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் பாகம் பிரித்துத்தர வேண்டியும், இதர பரிகாரங்களுக்காகவும் சமூகம் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றும் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் வழக்கிற்கு தேவையான முக்கியமான ஆவணங்கள் வீட்டில் எங்கோ காணடைந்துவிட்டதால் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் மேற்படி ஆவணங்களான தனது பள்ளி மாற்றுச்சான்றிதழ் அசல் மற்றும் ஆறுமுகம் என்பவரின் கருமகாரிய பத்திரிக்கை ஆகியவைகள் தற்போது தன் வீட்டில் வேறு ஆவணங்கள் தேடும்பொது கிடைக்கப்பெற்றன என்றும் தனது பிறப்பு சான்றிதழ் கானடைந்துவிட்டதால் அதன் சான்றிடப்பட்ட நகலை பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெற்று தாக்கல் செய்கிறேன் என்றும் மேற்படி ஆவணங்கள் வழக்கினை முடிவு செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் எனவே சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் தயவு கூர்ந்து மேலே கண்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு இத்துடன் தாக்கல் செய்யப்படும் தனது தரப்பு ஆவணங்களான 1) பிறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல், 2) பள்ளி கல்வி மாற்றுச்சான்றிதழ் அசல் மற்றும் 3) ஆறுமுகம்

என்பவரின் கருமகாரிய பத்திரிக்கை ஆகியவைகளை இந்த வழக்கின் ஓர் அங்கமாக ஏற்று உத்தரவிட வேண்டியது நியாயமும், அவசியமுமாகிறது என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு :-**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரிக்கையில் காணப்படும் விபரங்கள் யாவும் பொய்யும் கற்பனையுமானவை என்றும் உண்மைக்கு புறம்பானவை என்றும் முன்னுக்குப்பின் முரணானவை என்றும் வேண்டுமென்றே பொய்யுரைகளை இட்டுக்கட்டி கூறப்பட்டுள்ளவை என்றும் நீதிமன்ற பரிசீலனைக்கு உகந்ததல்ல என்றும் சட்டப்படி எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என்றும் அவைகளை இந்த 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி மறுதலிப்பதோடு அவைகளையும் அது சார்ந்த மனுவையும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்றுன்றும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்தபிறகு இந்த வழக்கிற்காக மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றும் மேற்படி மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முருகன் பிறப்புச் சான்றிதழ் இருசன் அவர்கள் இறந்த பிறகு மோசடியாக ஏற்படுத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்ட ஆவணமாகும் என்றும் மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பள்ளிக்கல்வி மாற்றுச்சான்றிதழ் அசல் ஆவணம் அல்ல என்றும் மேற்படி அசல் ஆவணம் என்று தவறாக குறிப்பிட்டுள்ளனர் என்றும் மேற்படி ஆவணம் இரண்டாம் பிரதி ஆகும் என்றும் மேற்படி ஆவணத்தின் உண்மைத்தன்மையை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும் மேலும் ஆறுமுகம் அவர்களின் இறப்பினை உறுதி செய்ய மனுதாரர்கள்

தாக்கல் செய்துள்ள அவரது காரியபத்திரிக்கை மனுதாரர்களால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களாகும் என்றும் மேற்படி ஆவணத்தில் உள்ள தேதி கிழமைகள் அனைத்தையும் அதன் உண்மைத்தன்மையும் இந்த எதிர்மனுதாரர்கள் குறிப்பாகவும் மொத்தமாகவும் மறுத்தலிக்கிறார்கள் என்றும் அதனை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும் வேண்டும் என்றே நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணாக்கி வழக்கை திசை திருப்பி காலம் கடத்தவே இந்த மனுவையும் மனுவுடன் தேவையற்ற ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இந்த மனு தள்ளுபடி செய்யலாயக்கானதாகும் என்றும் எனவே சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை எதிர்மனுதாரர்களுடைய செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டுமாய் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்கள் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறார் என்றும் எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

4. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சினை :-

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

## 6. தீர்வு :-

மனுதாரர்கள்/அசல் வழக்கின் வாதிகள் மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களை பெற அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களான

15.04.1980 தேதியிட்ட முருகன் என்பவரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல், 1ம் வாதியின் பள்ளி மாற்றுச்சான்றிதழ் (duplicate), 10.06.1997 தேதியிட்ட ஆறுமுகம் என்பவருக்கான கருமகாரிய பத்திரிக்கை ஆகியவைகள் வாதிகளின் வீட்டில் காணாமல் போய்விட்டதால் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் அந்த ஆவணங்கள் தற்போது கிடைக்கப்பெற்றமையால் அதனை வாதிகள் தரப்பு ஆவணங்களாக பெற அனுமதிக்க கோரியுள்ளார்கள்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்கள் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றும் அதனுடைய உண்மை தன்மையை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டும் என்றும் வழக்கினை வீண் காலதாமதம் செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8. வாதிகள் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்ய இயலாத ஆவணங்களை நீதிமன்றத்தில் அனுமதி பெறாமல் தாக்கல் செய்ய இயலாது என்றுதான் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 கூறுகிறது. மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்கின் தரப்பினர்கள் அவர்களது தரப்பு வழக்கினை நிரூபிக்க தேவைப்படும் ஆவணங்களை பெற இலகுவாக அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்களது நிரூபிக்கும் வாய்ப்பினை தடுத்து நிறுத்த கூடாது என்றும் எடுத்துகூறியுள்ளது. மேற்கண்ட முன் தீர்ப்புகளின் வழிநின்று இந்த மனுவினை கவனமாக பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர்கள் ஆட்சேபணை ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. வாதி தரப்பில் இம்மனு மூலம் பெறப்படும் ஆவணங்கள் சாட்சிகள் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும்போது அது தொடர்பாக குறுக்கு விசாரணை செய்யவும் ஆட்சேபணை செய்யவும் வாய்ப்பு உள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதகம் எதுவும் இல்லை என்று இந்த

நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்கள் கோரியவாறு மனு அனுமதிப்பது நீதியின்பால் சரியானது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 30.10.2023 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.